முருகப்பெருமான் துணை

**மகான் அசுவினித்தேவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.04.2023**, சனிக்கிழமை

1. தருமராசனே ஆறுமுக அரங்கனே
தவபலமாகவே ஞானம் தரும்
ஆறுமுகனார் அவதார ஞானியே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே அறிவுரை ஆசிதனை
குறைவிலா சோபகிருது தகர் திங்கள்
தெரிவிக்க மூவையோர் திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 16 ம் நாள், 29.04.2023, சனிக்கிழமை)
தேசிகனுக்கு அசுவினித்தேவர் யானும்
3. யனும் சன்மார்க்க நெறிவழி
உலகோர் வர எடுத்துரைப்பேன்
ஞானவான்கள் ஆக மக்கள்வர
நம்பிக்கை தரும் வண்ணம் அருளும்
4. அருளும் அரங்க மகானின்
ஆற்றல் மிக்க உபதேசங்களை
அருளுரையாக ஏற்று மக்கள்
அய்யமற ஏற்றுக் கடைபிடித்து
5. கடைபிடித்து தேற்றம் பெறவே
கட்டாயம் தரும சேவையை
தடையற உலகினில் செய்து
தரணியோர் தரும பலம் பெருக்க
6. பெருக்கவே மாற்றம் தானும்
பெருஞ் சக்தியாக உருவாகி
கருத்தாக கலியுகம் தன்னில்
கந்தவேலன் ஆசி கிட்டி
7. கிட்டியே ஞானிகள் ஆவர்
குறைவிலா ஞானயுகமாக
தட்டாது மாற்றம் நிகழ்த்தி
தாமுரைக்க அற்புதம் புரிவர்

8. அற்புதம் நிகழ்த்தும் ஞானி
அரங்கன் அறிவுரைகளை
ஏற்பு கொண்டு வாழுகின்ற
எல்லா மக்களுமே தடையற

9. தடையற தவதரும நிலையில்
தன்னடக்கமுடன் தேறியே
இடரில்லா அருள் பொருள்வளம்
இதனுடன் தேக மனோபலம்

10. பலமுற சகலவகை மாற்றம்
பாருலகில் தேறி இனிதே
வலம் வருவர் கலியினில்
வல்லமை பொருந்திய வர்களாக

11. ஆகவே மனிதருள் மாற்றம்
அரங்கன் அவதாரத்தால்
வகையாக நடப்பது உறுதி
வழங்கிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–